மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

ந.க.எண்.33187/2012 சி5 நாள் : 24.11.2017

## பொது ஏல அறிவிப்பு

தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாக்கும் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 44/97) பிரிவு 3 ன் கீழ் அரசாணை எண்.137, உள் (காவல் XIX) துறை, நாள்: 09.02.2016–ன்படி (திருத்தப்பட்ட அரசாணை எண்.56 உள் (காவல் XIX) துறை, நாள் 12.01.2017) **தி/வா. ஸ்டார் பார்ம்ஸ் அன்ட் பவுல்ட்ரி** நிறுவனத்திற்கு சொந்தமான அசையும், சொத்துக்கள் இடைமுடக்கம் செய்யப்பட்டு, அதன் பேரில் கோயமுத்தூர் சிறப்பு நீதிமன்றத்தில் (TNPID) தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.2/2017–ல், **06.04.2017–ம்** தேதி வழங்கப்பட்ட தீர்ப்பில் மேற்படி அரசாணையில் கண்டுள்ள சொத்துக்களை நிரந்தர முடக்கம் செய்து, விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் தகுதிபெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் வசமுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் கண்டுள்ள **ஒரு நான்கு சக்கர வாகனம் 22.08.2017–ம் தேதியன்று பொது ஏலத்தில் விடப்பட்டதில், அரசு நிர்ணயித்த தொகைக்கு எவரும் ஏலம் கோராததால்,** மீள பொது ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது.

**ஏலம் விட அனுமதி அளிக்கப்பட்ட நிறுவனத்தின் விபரம் மற்றும் வழக்கின் விபரம்:–**

| நிறுவனத்தின் பெயர்/முகவரி | அரசாணை எண்/நாள் | தீர்ப்பளிக்கப்பட்டுள்ள வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| தி/வா. ஸ்டார் பார்ம்ஸ் அன்ட் பவுல்ட்ரி, எண்.20/362, மெயின் ரோடு, மாரியம்மன் கோவில் அருகில், வெள்ளோடு–638112, ஈரோடு மாவட்டம். | எண்.137 உள் (காவல் XIX) துறை, நாள்: 09.02.2016 (திருத்தப்பட்ட அரசாணை எண்.56 உள் (காவல் XIX) துறை, நாள் 12.01.2017) | O.A.No.2/2017, நாள்: 06.04.2017 |

**ஏலம் விட வழக்கில் குறிப்பிடப்பட்ட வாகனம் விபரம்**

| Sl. No. | Description of Vehicle | Registration No. | Engine Number | Chassis No |
|---|---|---|---|---|
| | Four Wheeler | | | |
| 1. | Eicher 10.90 FSD (Medium Goods Vehicle) | TN 72 T 2178 | E482A10969329 | 17EC11075454 |

தகுதிபெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர். ஈரோடு அவர்களால் மேற்படி ஒரு நான்கு சக்கர வாகனம் ஆகியவற்றை **19.12.2017**ம் தேதி பிற்பகல் **3.00** மணியளவில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொது

ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக உரிய வைப்பீட்டுத் தொகையை "Competent Authority and District Revenue Officer, Erode" என்ற பதவி பெயரில் கேட்பு வரைவாக (Demand Draft) செலுத்தி, பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம் எனவும், ஏலம் விடப்படவுள்ள வாகனத்தை ஏல தேதிக்கு முன்னதாக பார்வையிடலாம் எனவும் தகுதிபெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், ஈரோடு அறிவிக்கின்றார்.

24/11/17

தகுதிபெற்ற அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்,
ஈரோடு

24/11/2017

24/11/17

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

ந.க.எண்.33187/2017 சி5

நாள் : 24.11.2017

தி/வா. ஸ்டார் பார்ம்ஸ் அன்ட் பவுல்ட்ரி
(அரசாணை எண்.137, உள் (காவல் XIX) துறை, நாள்:09.02.2016)

ஏல நிபந்தனைகள்

1. விண்ணப்பத்தில் ஏலம் கோர இருக்கும் சொத்தின் விபரம், கேட்பு வரைவோலை விபரம், ஏலதாரரது முழு முகவரி மற்றும் புகைப்படம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.

2. **வாகனம்** ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் திரும்பத் தரக்கூடிய பிணை வைப்புத் தொகையாக நான்கு சக்கர வாகனத்திற்கு ரூ.25,000/– க்கான கேட்பு வரைவினை (Demand Draft) ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் **"Competent Authority and District Revenue Officer, Erode"** பெயரில் பெற்று ஆஜர்படுத்த வேண்டும்.

3. ஏலம் கேட்பதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே ஏலம் நடத்தும் இடத்திற்கு வந்து கேட்பு வரைவோலையை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஏலம் மூலம் கோரப்பட்ட உயர்ந்தபட்ச விற்பனைத் தொகையைக் கோரிய ஏலதாரர் ஏலத் தொகையில் 25% தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலையாக ஏலம் நடத்தும் அலுவலரிடம் உடனே செலுத்திட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், அவரது கேட்பு ரத்து செய்யப்படுவதுடன் அவர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஏலம் உறுதி செய்யப்பட்ட தொகைக்குரிய சரக்கு மற்றும் சேவை வரியை (GST) தொகையை ஏலதாரரே செலுத்த வேண்டும்.

5. இந்த பொது ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **வாகனத்தை** அதிகபட்ச ஏலம் கோரியவர் விதிகளின்படி 25% விற்பனைத் தொகையை செலுத்தியது போக மீதமுள்ள 75% தொகையை ஏலம் நடந்த நாளிலிருந்து 2 தினங்களுக்குள் செலுத்திட வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முழுத் தொகையையும் செலுத்தத் தவறினால் குறிப்பிட்ட நபர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகைகள் முழுவதும் அரசுக்கு பறிமுதல் செய்யப்படுவதுடன், விதிகளின்படி அடுத்தபடியாக அதிகத் தொகை ஏலம் கேட்ட நபருக்கு வாய்ப்பளிக்கப்படுவது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலரின் முடிவே இறுதியானது.

6. ஏலத்தில் விடப்படும் மாவட்ட நிர்வாக வசமுள்ள **வாகனம்** அன்றைய தினம் உள்ள நிலையிலேயே விற்பனை செய்யப்படும்.

7. ஏல அறிவிக்கை பிரசுரிக்கப்பட்ட பின்னரோ அல்லது விற்பனை உறுதி ஆணை பிறப்பிப்பதற்கு முன்னரோ நிபந்தனைகளை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ தகுதிபெற்ற அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அதற்கு நஷ்ட ஈடு கோர மனுதாரர்களுக்கு உரிமையில்லை.

8. உறுதி செய்யப்பட்ட விற்பனையை சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்கள் பொது நன்மையைக் கருதி ரத்து செய்ய நேரிட்டால் அதனால் ஏற்படும் இழப்புக்கு ஈடு கோர மனுதாரருக்கு உரிமையில்லை.

9. அறிவிப்பில் கண்டுள்ளவாறு மாவட்ட நிர்வாக வசமுள்ள **வாகனம்** பேரில் நீதிமன்றத்தில் ஆணை / தடையாணை பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட சொத்தினை விற்பனை செய்வது குறித்து தகுதிபெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

10. **வாகனத்தை** ஏலம் மூலம் வாங்கியவருக்கு எந்த காரணத்தினை முன்னிட்டும் இழப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க இயலாது.

11. **வாகனம்** தொடர்பான விபரத்தினை ஈரோடு பொருளாதார குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் விபரம் கேட்டுப் பெறலாம்.

12. பதினெட்டு வயதிற்குட்பட்டோர் ஏலத்தில் கலந்துகொள்ள முடியாது. ஏலம் நடத்தும் அலுவலர் எந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கும் ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கலாம். எவ்வித காரணமும் அறிவிக்காமல் ஏலம் நடத்தும் இடத்திலேயே எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் வெளியேற்றுவதற்கு ஏலம் நடத்தும் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

13. ஏலத்தில் விலை கோருபவர்கள் ரூ.5,000/– க்கு குறைவாக ஏலத் தொகையை உயர்த்திக் கோர அனுமதிக்கப்பட மாட்டார்கள். ரூ.5000/–க்கும் மேற்பட்டு ஏலம் உயர்த்தி கோரவேண்டும்.

14. ஏலம் நடத்துகிற இடத்திற்கு வெளியே இருந்து கேட்கும் கேள்விகளும் ஏலம் முடித்த பின்பு வரும் கோரிக்கைகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒவ்வொரு ஏலதாரரும் தனிப்பட்ட முறையில் ஏலம் கோர வேண்டும். ஏலதாரர்கள் கூட்டாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இணைந்தோ ஏலம் கேட்டால் அத்தகைய கோரிக்கை அனுமதிக்கப்படமாட்டாது.

15. ஏலம் ஆரம்பமாகும்போது இந்த ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனைகள் மற்றும் ஏலம் நடத்தும் அலுலரால் அறிவிக்கப்படுகின்ற சிறப்பு நிபந்தனைகள் ஆகியவை வாசித்துக் காண்பிக்கப்படும். ஒவ்வொரு ஏலதாரரும் அந்த நிபந்தனைகளை வாசித்து அறிந்து கொண்டதை ஒப்புக் கொள்ளும் வகையில் ஏல விளம்பரத்தின் நகலில் கையொப்பம் இடவேண்டும்.

16. ஏலம் உறுதி செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட ஏலக் கோரிக்கையை உயர்ந்த ஏலதாரர் திரும்ப பெறுக் கொள்ள இயலாது.

17. தபால் மூலமாகவோ, அல்லது தந்தி மூலமாகவோ கோரப்படும் ஏலக் கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

24/11/17

தகுதிபெற்ற அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்,
ஈரோடு

24/11/2017

24/11/17